# விலைமனு கோரல் (IFB)

## பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு - இலங்கை

## குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

## இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் இலத்திரனியல் கடவுச்சீட்டுகளைத் தனிப்பயனாக்கம் செய்வதற்கான விநியோக அமைப்பு மற்றும் ஏற்புடைய (Public Key Infrastructure - PKI) கூறுகளை கொள்முதல் செய்வதற்காக விலைமனு கோரல்

## IFB No: DIE/PRO/PKI/2025

1. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் சார்பில் மேல்நிலை கொள்முதல் குழுத் தலைவரினால் (HLPC) இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் **சார்பில்** இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு இலத்திரனியல் கடவுச்சீட்டுகளைத் தனிப்பயனாக்கம் செய்வதற்கான விநியோக அமைப்பு மற்றும் ஏற்புடைய **(Public Key Infrastructure - PKI**) கூறுகளை கொள்முதல் செய்வதற்காக தகைமையுள்ள வழங்குனர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

2. 2024 ஆம் ஆண்டின் தேசிய கொள்முதல் வழிகாட்டு நெறிக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள **சர்வதேச போட்டி அடிப்படையில் (ICB – (தனிக் கட்ட இரண்டு கடித உறை அமைப்பு**) விலைமனுக் கோரல் நடத்தப்படும். மேலும் வழிகாட்டு நெறிகளில் விபரிக்கப்பட்டுள்ளபடி தகைமைகளைக் கொண்டுள்ள அனைத்து விலைமனுதாரர்களுக்கும் விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியும்.

   ஒப்பந்தத்தை வழங்குவதற்கு தகுதி பெறுவதற்கு விலைமனுதாரர் கரைநிரலில் (blacklisted) சேர்க்கப்பட்டவராக இருத்தல் கூடாது. தகைமையுள்ள விலைமனுதாரர்களுக்கான தகைமை அளவுகோல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கி இருக்கும். (மேலதிக தகைமைத் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன):

   **அ) பொதுவான அனுபவம்;**

   விலைமனு சமர்ப்பிப்பதற்கு வழங்கப்படும் இறுதித் திகதிக்கு முன்னதாக குறைந்தபட்சம் கடந்த ஐந்து (05) வருடங்களில் விலைமனுதாரர் இலத்திரனியல் கடவுச்சீட்டு தனிப்பயனாக்கல் செயல்முறையில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்;

   **ஆ) ஒத்த இயல்புடைய ஒப்பந்தத்தில் பெற்றுள்ள விசேட அனுபவம்:**

   (i) விலைமனு சமர்ப்பிப்பதற்கு வழங்கப்படும் இறுதித் திகதிக்கு முன்னதாக கடந்த ஐந்து (05) வருடங்களில் விலைமனுதாரர் கடவுச்சீட்டுக்களை தனிப்பயனாக்கம் செய்யும் அமைப்பைப் பயன்படுத்தி குறைந்தபட்சம் மூன்று (3) மில்லியன் எண்ணிக்கையைக் கொண்ட இலத்திரனியல் கடவுச்சீட்டுக்களின் தனிப்பயனாக்கல் செயன்முறையை ஒப்பந்ததாரர் என்ற ரீதியில் வெற்றிகரமாக நிறைவுசெய்திருத்தல் வேண்டும்.

   (ii) விலைமனுதாரர் இலத்திரனியல் கடவுச்சீட்டுக்களுக்கான ஆகக்குறைந்தது இரண்டு (02) இலத்திரனியல் கடவுச்சீட்டு தனிப்பயனாக்கல் தீர்வுகளை வழங்கியிருத்தல் வேண்டும் அல்லது செயல்பாட்டில் வைத்திருத்தல் வேண்டும். மேலும் அவை கடிதங்கள் மூலம்

உறுதிப்படுத்தப்படல் வேண்டும். ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் குறைந்தபட்ச பெறுமதி பதினைந்து (15) மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும். மேலும் அந்தக் கருத்திட்டங்கள் விலைமனு சமர்ப்பிப்பு காலக்கெடுவிற்கு முன்னைய ஐந்து (05) ஆண்டுகளுக்குள் நிறைவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது செயல்பாட்டில் இருத்தல் வேண்டும். இந்தக் கருத்திட்டங்களில் குறைந்தபட்சம் ஒன்று (01) விலைமனுதாரர்களால் இயக்கப்படும் PKI தீர்வும் உள்ளடக்கப்பட்ட வழங்கல் சேவை கருத்திட்டமாக இருத்தல் வேண்டும்.

**இ) தரம் மற்றும் உத்தரவாத தேவைப்பாடுள்:**

விலைமனுதாரர் ISO 9001:2015 மற்றும் ISO 27001 தரச் சான்றிதழ்கள் மூலம் உத்தரவாதப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

**ஈ) சராசரி வருடாந்த வருமனாப் புரள்வு :**

விலைமனுதாரரின் குறைந்தபட்ச சராசரி வருடாந்த வருமானம் **USD 10** மில்லியனாக இருத்தல் வேண்டும். இது கடந்த 3 வருடங்களில் கணக்காய்வுசெய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மூலம் ஆதாரப்படுத்தப்படல் வேண்டும்.

**உ) நிதி மூலங்கள்:** இந்தக் கருத்திட்டத்திற்காக விலைமனுதாரரின் கடப்பாடுகள் அற்ற USD 1.8 மில்லியனை விடக் குறையாத பணப்புழக்கத் தேவையைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான திரவச் சொத்துக்கள், கடன் வசதிகள் மற்றும் பிற நிதி வழிகள் போன்ற நிதி ஆதாரங்களுக்கான பிரவேசம் அல்லது கிடைப்புத்தன்மை விலைமனுதாரர் மூலம் காண்பிக்கப்படல் வேண்டும்.

3. இதில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களுக்கு இது தொடர்பான மேலதிக விபரங்களை, இலங்கை, பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, "சுஹுறுபாயா", **05** ஆம் மாடியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பிரதிக் கட்டுப்பாட்டாளிடரிடம் (கொள்முதல்) 2025 ஏப்ரல் 28 ஆம் திகதியிலிருந்து வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பெற்றுக்கொள்ள முடியும் அல்லது தொலைபேசி இலக்கம் :+94112101559 மற்றும் மின்னஞ்சல் dcprocu@immigration.gov.lk மூலம் பரீட்சிக்க முடியும். விலைமனு ஆவணங்கள் பரீட்சிப்புத் தேவைக்காக மாத்திரம் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் (www.pubsec.gov.lk) இணையத்தளத்திலும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் (www.immigration.gov.lk/procurement) இணையத்தளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

4. இங்கு மேலே பந்தி 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தில் மீளளிக்கப்படாத இலங்கை ரூபா 250,000.00 அல்லது இலங்கையில் சுதந்திரமாக மாற்றக்கூடிய நாணயத்திற்குச் சமமான தொகையை கட்டணமாகச் செலுத்தி எழுத்துமூல கோரிக்கையொன்றை தனது வியாபார கடிதத் தலைப்பில் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றை பெற்றுக் கொள்ள முடியும். கட்டணம் காசாக செலுத்தப்படுதல் வேண்டும்.

5. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் 2025 ஜூன் மாதம் 23 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு அல்லது முன்னர் கிடைக்கக்கூடியவாறு மேலே 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அழைக்கப்பட்டு முடிந்தவுடன் 2025. ஜூன் 23 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு சமூகமளிப்பதற்கு விருப்பத்தைத் தெரிவித்திருந்த விலைமனுதாரர்களினது பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் இலங்கை ரூபாய் ஐம்பத்தைந்து மில்லியன் (LKR 55 மில்லியன்) அல்லது அதற்கு சமமான தொகை இலங்கையில் இலகுவாக மாற்றக்கூடிய நாணயத்தில் வங்கி உத்தரவாதத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

6. விலைமனு முன் சந்திப்பொன்று 2025 மே மாதம் 15 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு இலங்கை, பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, "சுஹுறுபாயா", **14** ஆம் மாடியில் அமைந்துள்ள பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் கேட்போர்கூடத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள அனைத்து விலைமனுதாரர்களும் விலைமனு முன் சந்திப்புக் கூட்டத்தில் பங்குபற்ற முடியும்.

**தலைவர்**
**மேல்நிலை கொள்முதல் குழு (HLPC)**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்**
**05 ஆம் மாடி,**
**“சுஹுறுபாயா”,**
**ஸ்ரீ சுபூத்திபுர வீதி,**
**பத்தரமுல்லை,**
**இலங்கை.**

**2025 ஏப்ரல் 27 ஆம் திகதி.**